Deposition of Witness
In the court of the Additional Subordinate Judge, Tenkasi.
O.S 295/2019
வா.சா.1 அண்ணாத்துரை

| | |
|---|---|
| Name | அண்ணாத்துரை |
| Father's Name | |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

13.04.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 1ம் வாதி நான் எனக்காகவும் 2ம் வாதிக்காகவும் சேர்த்து என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 01.05.1929ம் தேதியில் அருணாசலக்கோனாரும் முத்துக்கோனாரும் பிறப்பித்துக்கொண்ட பாக உடன்படிக்கை சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ1. 1ம் தபசிலின் அ பதிவேடு இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டது வா.சா.ஆ2. ( ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) சொக்கம்பட்டி கிராம சர்வே 954ன் கிராம புல வரைபட நகல் வா.சா.ஆ3. 12.10.1972ம் முத்துபக் கோனார், சுப்பம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ4. 5.7.2010ம் தேதியில் சுப்பம்மாள் என்பவர் எழுதி வைத்த உயில் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ5. ( உயில் ஆவணம் தகுந்த சாட்சிகளின் மூலம் குறியீடு செய்யப்பட வேண்டும் என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 17.10.18ம் தேதி 1, 3 முதல் 5 பிரதிவாதிகளில் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ6. மாதிரிவரைபடம் வா.சா.ஆ7. ( பிராது தபசில் சொத்திற்குரியது அல்ல என ஆட்சேபனை செய்யப்பட்டு

ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). முத்துக்கோனார் வம்சா வழியை காட்டும் கொடிவழி வா.சா.ஆ8. (கொடிவழி தவறாக உள்ளது என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) சொக்கம்பட்டி கிராம சொத்து வழிகாட்டு மதிப்பீடு நகல் வா.சா.ஆ9. வாதிகள் பிரதிவாதிகள் பேரில் சொக்கம்பட்டி காவல்துறையில் கொடுத்த புகார் மனு அசல் ரசீது வா.சா.ஆ10. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)